திட்டத்தில் இந்தத் தொகை ஒதுக்கப்பட்டு, இந்த ஆண்டு அந்தத் திட்டத்திற்கான 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு தொகை ஒதுக்கப்பட்டிருப்பதற்காக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இந்த ஒதுக்கீட்டுத் தொகை 10 இலட்சம் என்பது போதாது என்ற காரணத்தால் அரசு மறுபரிசீலனை செய்து அந்தத் தொகையை உயர்த்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 50½ இலட்சம் ரூபாய். இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். ஆகவே வரும் ஆண்டுகளில் இதற்கான நிதியாதாரத்தை அதிகமாகப்பெருக்கி விரைவில் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 580. திரு. பி. வி. இராஜேந்திரன். இருக்கையில் இல்லை. @

வினா எண் 581. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

581—

என். ஆர். இ. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு.

திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நத்தம் தொகுதியில் 1988–89 முதல் 1990–91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுவிட்டனவா?

(ஆ) இல்லையெனில் எப்போது மின் இணைப்பு அளிக்கும் பணி முழுமையடையும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நத்தம் தொகுதியில் 1988-89 முதல் 1990-91 வரை என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு மின்னிணைப்பு கோரி வந்த விண்ணப்பங்கள் 1415. இதில் 1990-91 முடிய 910 விண்ணப்பங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுவிட்டன.

@ மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 28-4-1992 ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப்பெற்றது.

1992 ஏப்ரல் 21]

(ஆ) மீதம் உள்ள 505 தொகுப்பு வீடுகளில் இத்திட்டத்தின் கீழ் 250 வீடுகளுக்கும் ஆர். எல். இ ஜி. பி. திட்டத்தில் 67 வீடுகளுக்கும் மின்னிணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 188 வீடுகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் மின்னிணைப்பு வழங்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதிக்கு 2000 வீடுகள், தொகுப்பு வீடுகள் கட்டப்படும் என்பது அரசினுடைய ஒரு விதி. அதிலே குறிப்பாக நத்தம் தொகுதியில் எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவது என்பது உள்ளாட்சித் துறையைச் சேர்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிட்டது போல் தொகுதிக்கு 2000 வீடுகள் என்றல்ல. எனவே அது சம்பந்தமாக உள்ளாட்சித் துறைக்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆண்டி அம்பலம் மின் இணைப்பு கொடுப்பது தான் பொதுப்பணித்துறை அமைச்சர் பொறுப்பிலே வரும்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுப்பு வீடுகள் 2000 இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய துறை யிலே இல்லை. அது உள்ளாட்சித் துறையில் வருகிறது.

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்னிணைப்பு வழங்குவதில் இன்னும் காலதாமதம் இருப் பது பற்றிச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டில் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். எனவே இதிலே மேலும் கால தாமதம் இல்லாமல் விரைவில் கொடுக்க அமைச்சர் அவர் கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல பாக்கி மின்னிணைப்பு கொடுக்கப்பட வேண்டியவை 188 வீடுகள் தான். 1992-93 ஆம் ஆண்டில் அதாவது இந்த ஆண்டில் அதற்கான மின்னிணைப்பு

வழங்கப்பட்டுவிடும். ஆகவே இந்த ஆண்டு முதல் இருக்கிற மின் னிணைப்புகளும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 582, திரு. தே. ஜனார்த்தனன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

582—

விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை அமைத்தல்.

* 1812— திரு. தே. ஜனார்த்தனன்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகராட்சிக்கு பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகிறது. கழிவுநீரை வெளியேற்றுவதற்கும், கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கும் தேவையான இடங்களை ஒதுக்குமாறு நகராட்சியிடம் கோரப்பட்டுள்ளது. நகராட்சி இடம் ஒதுக்கீடு செய்தபின், திட்டம் வடிவமைக்கப்படும். இதர ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் கழிவு நீரகற்றவும், கழிவு நீரேற்றும் குழாய்கள் அமைக்கவும் விரைவில் இடம் தேர்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் அதுபற்றி ஆய்வு செய்து அந்தப் பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.